ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2302/20 - 2022 ඔක්තෝබර් මස 19 වැනි බදාදා - 2022.10.19
*2302/20 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 19 ஆந் திகதி புதன்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்*

***1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான கட்டளை***

*திருத்தப்பட்டவாறான 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறிந்துரைக்க்பபட்ட பகுதியையும் அத்தகைய அட்டவணியின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் காட்டப்பட்டுள்ள எல்லைகளின் வரையறைகளைக் கொண்டதுமான இப்பகுதியை அபிவிருத்திக்குப் பொருத்தமானதென அபிப்பிராயப்படுவதனால், அத்தகைய பகுதிகளை நகர அபிவிருத்திப் பகுதிகளாக இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.*

***பிரசன்ன ரணதுங்க** (பா. உ.),*
*நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்.*

*நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு,*
*17 மற்றும் 18 வது மாடிகள், "சுஹுருபாய",*
*சுபுதிபுர வீதி,*
*பத்தரமுல்லை,*
*2022, செத்தெம்பர் 28.*

1A - G 37816 — 21 (2022/10)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை -1**

**வர்த்தமானி அறிவித்தல் இல. - 1409/8** - பாரிய மாத்தறை நகர அதிகாரப் பிரதேசத்தின் ஒரு பகுதி (மாத்தறை, வெலிகம, வெலிபிட்டிய, மாலிம்பட, நிஹகொட, தெவிநுவர பிரதேச செயலகப் பகுதிகளின் ஒரு பகுதி) நகர அபிவிருத்திப் பிரதேசமென 2005.09.07 ஆந் திகதி பிரகடனப்படுத்தப்பட்டது.

**வர்த்தமானி அறிவித்தல் இல. - 1420/17** - மாத்தறை மாவட்டத்தினுள்ளே தெற்கு அதிவேக வீதியினை உள்ளடக்கிய வலயம் நகர அபிவிருத்திப் பிரதேசம் என 2005.11.23 ஆந் திகதி பிரகடனப்படுத்தப்பட்டது.

## அட்டவணை II

## பாரிய மாத்தறை நகர அபிவிருத்திப் பிரதேசம் நகர அபிவிருத்திப் பிரதேசமாக விரிவுபடுத்தி பிரகடனப்படுத்தல்

**நிரல் - I**

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தில் அமைந்துள்ள வெலிபிட்டியின் (ஒரு பகுதி) வெலிகமையின் (ஒரு பகுதி), நிஹகொடவின் (ஒரு பகுதி) மாலிம்படவின் (ஒரு பகுதி) மாத்தறையின் (ஒரு பகுதி) தெவிநுவரவின் (ஒரு பகுதி) ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகளினை உள்ளடக்கிய முழுப் பிரதேசத்தினையும் உள்ளடக்கும்.

**நிரல் - II**

**வடக்கு :**

அக்குரஸ்ஸ பிரதேச செயலகப்பிரிவின் தெற்கு எல்லையின் வெலிபிட்டிய பிரதேசசெயலகப் பிரிவின் வடக்கு எல்லை மற்றும் யக்கலமுல்லை பிரதேச செயலகப் பிரிவின் கிழக்கு எல்லையின் குறுக்குவெட்டு தொடக்கப் புள்ளியிலிருந்து வெலிபிட்டிய பிரதேச செயலகப் பிரிவின் வடக்கு எல்லையினுடாக தென்கிழக்கு திசைக்கு மாலிம்பட பிரதேச செயலகப் பிரிவின் மேற்கு எல்லையை சந்திக்கும் வரை, அந்த இடத்தில் இருந்து குறித்த எல்லையினுடாக வடக்கு திசைக்கு மாலிம்பட பிரதேச செயலகப்பிரிவின் வடக்கு எல்லையை சந்திக்கும் வரை, அந்த இடத்தில் இருந்து அந்த எல்லையினூடாக கிழக்கு மற்றும் தென்கிழக்கு திசைக்கு நிஹகொட பிரதேச செயலகப் பிரவின் மேற்கு எல்லை மற்றும் வடக்கு எல்லையின் குறுக்குவெட்டு புள்ளியினை சந்திக்கும் வரை, அந்த இடத்தில் இருந்து அந்த எல்லையினுடாக வடகிழக்கு திசைக்கு தென் கிழக்கு திசைக்கு நிஹகொட பிரதேச செயலகப் பிரிவின் வடக்கு எல்லையினை சந்திக்கும் வரை, அந்த இடத்தில் இருந்து அந்த எல்லையினுடாக கிழக்கு திசைக்கு நிஹகொட பிரதேச செயலகப்பிரிவு கிழக்கு எல்லையினை சந்திக்கும் வரை, அந்த இடத்தில் இருந்து அந்த எல்லையினுடாக தெற்கு திசைக்கு தெஹிநுவர பிரதேச செயலகப் பிரிவின் மேற்கு மற்றும் வடக்கு எல்லையின் குறுக்குவெட்டுப் புள்ளியினை சந்திக்கும் வரை, அந்த இடத்தில் இருந்து அந்த எல்லையினுடாக வடகிழக்கு திசைக்கு தெவிநுவர பிரதேச செயலகப்பிரிவின் கிழக்கு எல்லை வரை,

**கிழக்கு :**

கடைசியாக குறிப்பிட்ட புள்ளியிலிருந்து தெவிநுவர பிரதேச செயலகப்பிரிவு கிழக்கு எல்லையினுடாக தெற்கு திசைக்கு மாத்தறை - தங்கல்ல பிரதான வீதியின் மத்திய கோடு வரை, அந்த இடத்தில் இருந்து தெவிநுவர பிரதேச செயலகப் பிரிவின் கிழக்கு எல்லையினுடாக தெற்கு திசையின் உயர் அலைக் கோட்டினை அடையும் வரை.

**தெற்கு :**

கடைசியாக குறிப்பிட்ட புள்ளியிலிருந்து உயர் அலை கோட்டின்னுடாக மேற்கு திசைக்கு 2005.05.07 ஆந் திகதி

இலக்கம் 1409/8 கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக பிரகடனப்படுத்தப்பட்ட பாரிய மாத்தறை நகர அபிவிருத்திப் பிரதேசத்தின் கிழக்கு எல்லையின் குறுக்குவெட்டுப் புள்ளியினை சந்திக்கும் வரை. அந்த இடத்தில் இருந்து அந்த வர்த்தமானி அறிவித்தலினூடாக பிரகடனப்படுத்தப்பட்ட நகர அபிவிருத்திப் பிரதேசத்தின் கிழக்கு எல்லையினூடாக வடக்கு திசைக்கு தங்கல்ல - மாத்தறை பிரதான வீதியின் மத்திய கோடு வரை, அந்த இடத்தில் இருந்து அதே வீதியின் மத்திய கோட்டின் குறுக்குவெட்டு வடக்கு திசைக்கு அதே வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக பிரகடனப்படுத்தப்பட்ட நகர அபிவிருத்திப் பிரதேசத்தின் வடக்கு எல்லையினை சந்திக்கும் வரை, அந்த இடத்தில் இருந்து அதே வடக்கு எல்லையினூடாக மேற்கு திசைக்கு 2005.11.23 ஆந் திகதி இலக்கம் 1420/17 இனை கொண்ட வர்த்மானி அறிவித்தலின் ஊடாக பிரகடனப்படுத்தப்பட்ட நகர அபிவிருத்திப் பிரதேசத்தின் வடக்கு குறுக்குவெட்டு புள்ளியினை சந்திக்கும் வரை, அந்த இடத்தில் இருந்து 2005.09.07 ஆந் திகதி இலக்கம் 1709/8 இனைக் கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட நகர அபிவிருத்திப் பிரதேசத்தின் மேற்கு எல்லையினூடாக தென்மேற்கு, மேற்கு மற்றும் தென் கிழக்கு திசைக்கு பழைய காலி வீதியின் மத்திய கோட்டினை அடையும் வரை, அந்த இடத்தில் இருந்து அதே வீதியின் மத்தி புள்ளியின் ஊடாக தென்மேற்கு திசைக்கு காலி - மாத்தறை பிரதான வீதியின் குறுக்கு வெட்டு தென் கிழக்கு திசைக்கு உயர் அலைக் கோட்டினை அடையும் வரை, அந்த இடத்தில் இருந்து மேற்கு திசைக்கு உயர் அலைக் கோட்டின் வெலிகம பிரதேச செயலகப்பிரிவின் மேற்கு திசையை சந்திக்கும் வரை.

**மேற்கு :**

கடைசியாக குறிப்பிட்ட புள்ளியிலிருந்து வெலிகம பிரதேச செயலகப்பிரிவு மேற்கு எல்லையினூடாக வடக்கு திசைக்கு வெலிப்பிட்டிய பிரதேச செயலகப்பிரிவின் தெற்கு மற்றும் மேற்கு எல்லையின் குறுக்கு வெட்டுப் புள்ளியினை அடையும் வரை அந்த இடத்தில் இருந்து அதே எல்லையினூடாக வடகிழக்கு மற்றும் வடமேற்கு திசைக்கு 2005/11/23 ஆந் திகதி 1420/17 இனைக் கொண்ட வர்த்மானி அறிவித்தல்படி பிரகடனப்படுத்தப்பட்ட அதிவேக வீதிக்கு உரித்தான நகர அபிவிருத்திப் பிரதேசத்தின் தெற்கு எல்லையின் குறுக்கு வெட்டுப் புள்ளியினை அடையும் வரை, அந்த புள்ளியிலிருந்து வடக்கு திசைக்கு வரையப்பட்ட கோடானது 2005.11.23 ஆந் திகதியின் இலக்கம் 1420/17 கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக பிரகடனப்படுத்தப்பட்ட நகர அபிவிருத்திப் பிரதேசத்தின் வடக்கு எல்லை வரை அந்த இடத்தில் இருந்து வெலிப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவின் மேற்கு எல்லையின் ஊடாக வடமேற்கு மற்றும் மேற்கு திசைக்கு காலி மாதம்பா வீதியின் மத்திய புள்ளியினை அடையும் வரை, அந்த இடத்தில் இருந்து அதே வீதியின் மத்திய குறுக்கு வெட்டுப் புள்ளியினை அடையும் வரை, அந்த இடத்தில் இருந்து அதே வீதியின் மத்திய குறுக்கு வெட்டு புள்ளியின் வெலிகம பிரதேச செயலகப் பிரிவின் மேற்கு எல்லையின் ஊடாக வடக்கு, தென்கிழக்கு மற்றும் வடகிழக்கு திசையினை சந்திக்கும் ஆரம்ப புள்ளியினை அடையும் வரை, வரையப்பட்ட கோட்டினை உள்ளடக்கிய பிரதேசம்.

EOG 10 - 0171